# 12

# "மெல்-கி-சே-யார்?"

## (7:1-8:2)

*லேவியத்துவ ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் இயேசுவின் ஆசாரியத்துவம் மேன்மையானது என்ற விவாதத்தின் இருதயம் போன்ற மையப்பகுதிக்கு நாம் வந்திருக்கிறோம். இயேசு "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி என்றென்றைக்கும் பிரதான ஆசாரியராக" இருக்கிறார் என்ற கருத்துடன் எழுத்தாளர் இதைத் தொடங்கினார். இதை 5ம் அதிகாரத்தில் இருமுறைகள் அவர் உரைத்தார் (வசனங்கள் 6, 10). அந்த இடத்தில் அவர் நிதானித்து, ஆவிக்குரிய "பலமான ஆகாரத்திற்கு" தமது வாசகர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை (காண்க 5:12-14) - அதாவது, நாம் கலந்துரையாடப்போவது போன்ற கடினமான பாடக்கருத்துக்களைப் புரிந்துகொள்ள அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை என்று கூறினார். பின்பு அவர், ஆவிக்குரிய பிரகாரம் வளராமல் இருப்பதன் அபாயத்தை விளக்க கொஞ்சம் சமயம் எடுத்துக் கொண்டார். தமது புத்திகூறுதலின் முடிவில், இயேசு "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி என்றென்றைக்கும் பிரதான ஆசாரியராக" இருக்கிறார் என்பதை (6:20) மீண்டும் வலியுறுத்தினார். கடைசியில் அவர், அந்த வார்த்தைகளின் தனிச்சிறப்பைக் கலந்துரையாடத் தயாரானார். அதை அவர் 7ம் அதிகாரத்தில் செய்தார்.*

*மெல்கிசேதேக்கு யார் என்று மக்களிடத்தில் நீங்கள் கேட்டால், "மெல்கி-சே-தே-யார்?" என்பதே பதிலாக இருக்கலாம். பழைய ஏற்பாட்டில் வரும் இந்தப் பாத்திரம், "இரகசிய (பொருள்மறைவான) மெல்கிசேதேக்கு" என்று குறிப்பிடப்பட்டுள்ளார். பல ஆண்டுகளாக மக்கள் நமது வசனப்பகுதியின் பின்வரும் வார்த்தைகள் குறித்துத் திகைப்படைந்துள்ளனர்: "இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடைய வனாயிராமல்" (7:3). இந்த மெல்கிசேதேக்கு என்பவர் யார்? மற்றும் மெல்கிசேதேக்கின் முறைமைப்படியே இயேசு ஆசாரியரானார் என்று எழுத்தாளர் கூறியபோது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன? இந்தக் கேள்விகளுக்கு நாம் இப்பாடத்தில் பதில் உரைப்போம்.*

### மூன்று வசனப்பகுதிகள்

*எபிரெயருக்கு எழுதிய நிருபம் தவிர, வேதாகமத்தில் மெல்கிசேதேக்கைப் பற்றி இரண்டே இரண்டு குறிப்புகள் மாத்திரம் உள்ளன: ஆதியாகமம் 14:18-20ல், அவர் ஆபிரகாமைச் சந்தித்தது பற்றிய சுருக்கமான விபரம் மற்றும் எபிரெயர் 7:1-28ல் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ள சங்கீதம் 110:1-4 வசனப் பகுதி. இவ்வசனப் பகுதிகளை நாம் கண்ணோக்குவோமாக.*

### ஆசாரியத்துவம் சித்தரிக்கப்படுகிறது (ஆதியாகமம் 14:18–20)[1]

மெல்கிசேதேக்கைப் பற்றி நாம் அறியும் எல்லா விஷயங்களையும், ஆதியாகமத்தில் மூன்று வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. மெல்கிசேதேக்கு "சாலேமின் இராஜா" என்றும் "உன்னதமான தேவனுடைய ஆசாரியர்" என்றும் குறிப்பிடப் பட்டுள்ளார். ஆபிரகாம் பல அரசர்களுடன் போரிட்டு வெற்றியாளராகத் திரும்பி வந்தவேளையில், அவரை மெல்கிசேதேக்கு ஆசீர்வதித்தார். பின்பு ஆபிரகாம் யுத்தத்தில் கொண்டுவந்தவைகள் யாவற்றிலும் தசமபாகத்தை அவருக்குத் கொடுத்தார்.

மெல்கிசேதேக்கு லேவி கோத்திரத்திலிருந்து வரவில்லை. (லேவி பிறப்பதற்கு இன்னும் பல ஆண்டுகள் கடந்து செல்ல வேண்டியிருந்தது.) மெல்கிசேதேக்கு எவ்வாறு அல்லது எந்த அடிப்படையில் ஆசாரியரானார் என்று நமக்குத் கூறப்படுவதில்லை, ஆனால் அவரது ஆசாரியத்துவம் மனித வம்சவழியின் அடிப்படையில் ஆனதல்ல என்பது இங்கு மறைமுகமான கருத்தாக உள்ளது.

### ஆசாரியத்துவம் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது (சங்கீதம் 110:1-4)

சங்கீதம் 110, மேசியாத்துவ சங்கீதமாக உள்ளது.[2] அதிலுள்ள வசனப்பகுதிகள் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளன. எபிரெயர் 1:13ல் எழுத்தாளர், சங்கீதம் 110:1ல் இருந்து மேற்கோள் காண்பித்தார் மற்றும் அந்த வார்த்தைகளை அவர் இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தினார். 110ம் சங்கீதம், இயேசுவை மேசியாவாகவும் அரசராகவும் (வசனங்கள் 1-3) மற்றும் "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி" (6:20) ஆசாரியராகவும் (வசனம் 4) சித்தரிப்பதைக் கண்ணோக்குங்கள்.

### ஆசாரியத்துவம் பூரணப்படுகிறது (எபிரெயர் 7:1-28)

அது நம்மை எபிரெயர் 7ம் அதிகாரத்திற்குக் கொண்டுவருகிறது, இந்த அதிகாரத்தில், ஆதியாகமத்தில் சித்தரிக்கப்பட்டிருந்ததும் பின்பு சங்கீதங்களில் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்ததும், இயேசுவுக்குள் நிறைவடைந்தன (பூரணப்பட்டன) என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளர் அறிவித்தார். *இயேசு*, "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி என்றென்றும் ஆசாரியராக" இருக்கிறார்.

## ஆறு இணைகருத்துக்கள்

இயேசு நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்று எண்ணப்படுவதற்கு முன்பாக, அவர் சட்டப்பூர்வமான வகையில் அவ்வாறு இருக்கிறார் என்பது நிரூபிக்கப்பட வேண்டியதாக இருந்தது. எழுத்தாளர் இதை, இயேசு ஆரோனின் முறைமைப்படியல்ல ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமைப்படியே பிரதான ஆசாரியரானார் என்று காண்பித்ததன் மூலம் செய்தார். இயேசு எந்தக் கருத்தில் மெல்கிசேதேக்கைப் போன்று பிரதான ஆசாரியராக இருந்தார்? அவர்களின் ஆசாரியத்துவம் ஒன்றுபோல் இருந்தது என்பதற்கு எபிரெயர் 7ம் அதிகாரம் பல கருத்துக்களைத் தெரிவிக்கிறது.[3]

### அவர்களின் இராஜரீக இயல்பில்

லேவியத்துவ ஆசாரியத்துவத்தின்கீழ், ஆசாரியர்கள் மற்றும் அரசர்கள் ஆகியோரின் பணிகள் வித்தியாசப்பட்ட நிலைகளில் இருந்தன. இருப்பினும்

மெல்கிசேதேக்கு, அரசர் மற்றும் ஆசாரியர் ஆகியோரின் பணிகளை ஒன்றிணைத்தார் (7:1). அதுபோன்றே இயேசுவும், ஆசாரியராகவும் (7:17; 8:1) இராஜாவாகவும் இருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்து, "கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவும்" என்று விவரிக்கப் பட்டுள்ளார் (வெளிப்படுத்தின விசேஷம் 17:14; 19:16; இவற்றை 1 தீமோத்தேயு 6:15 உடன் ஒப்பிடவும்).

**அவர்களின் ஒழுக்கரீதியான இயல்பில்**

மெல்கிசேதேக்கின் பெயரும் பட்டமும், அவர் நீதி மற்றும் சமாதானம் என்ற பண்புகளைக் கொண்டிருந்தார் என்று மறைமுகமாக உணர்த்தின (எபிரெயர் 7:2). இது, கெதர்லாகோமேரையும் அவனது கூட்டாளிகளையும் தோல்வியடையச் செய்த ஆபிரகாம், அதன்பின்பு அங்கு கொள்கையிட்டவற்றில் பத்தில் ஒருபங்கை - இதை அவர் (சட்டப்பூர்வமான கேட்டுக்கொள்ளுதல் என்ற வகையில்) செய்ய வேண்டியிருந்தது என்பதால் அல்ல, ஆனால் அவர் இதைச் செய்ய விரும்பிய காரணத்தினால் இவ்வாறு - மெல்கிசேதேக்குக் கொடுத்தார் என்ற உண்மையினால் அடிக்கோடிடப்படுகிறது (வசனம் 4; காண்க ஆதியாகமம் 14:17-20).

ஒழுக்கரீதியான பண்பு என்பது, லேவியத்துவ ஆசாரியத்துவத்தில் செய்வதற்கு ஒன்றையும் கொண்டிருந்தது இல்லை. ஒரு ஆசாரியராக இருத்தல் என்பது வம்சவழி சார்ந்த விஷயமாக இருந்தது. ஒரு மனிதர் சரியான இரத்தத்தால் வழியைக் கொண்டிருந்தார் (மற்றும் உடல் குறைபாட்டின் காரணமாக தகுதியற்றுப் போகாதிருந்தார்) என்றால், அவர் ஒரு ஆசாரியராயிருந்தார். சரியான இரத்தத்தால் வழியைக் கொண்டிராத ஒருவர் எவ்வளவு தேவபக்தி உடையவராக இருந்தாலும், அவர் ஆசாரியராக முடியாது. மெல்கிசேதேக்கைப் போன்றே இயேசுவும், தமது வம்சவழியினால் என்பதற்கு மாறாக, தமது வாழ்வின் உயர் பண்பினால் (வசனங்கள் 16, 26) ஆசாரியரானார் என்பது இங்கு மறைமுகமான விவாதமாக உள்ளது.

**அவர்களின் கோத்திரமற்ற இயல்பில்**

ஆதியாகமத்தில் மெல்கிசேதேக்கு தோற்றம் தரும் ஒரு சில வசனங்களில், பின்வருவன போன்ற, தனிப்பட்ட விபரம் பற்றிய குறிப்பு எதுவும் ஏற்படுத்தப்படுவதில்லை: அவர் எங்கிருந்து வந்தார் அல்லது அவருக்கு என்ன நடந்தது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்பே இது தனிச்சிறப்புடையதாகிறது. வம்சவழிகள் ஏராளமாகக் கூறப்படும் ஒரு புத்தகத்தில் இந்த விபரம் காணப்படுகிறது. இந்த விபரமானது, ஆசாரியர்கள் பற்றிக் கண்டிப்பான சட்டங்களை வரைந்திட்டிருந்த மோசேயினால் எழுதப்பட்டிருந்தது; ஆனால் மெல்கிசேதேக்கு ஆசாரியரானது எவ்வாறு என்பதைப் பற்றி அவர் (மோசே) தகவல் எதுவும் தரவில்லை. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம், லேவியத்துவ ஆசாரியத்தைப் போன்று, பரம்பரையைச் சார்ந்ததாக இருக்கவில்லை என்று காண்பிக்க, இந்த அமைதியைப் பற்றிப் பிடித்துக்கொண்டார் (வசனம் 3). ஆகையால் இயேசு, யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருக்கவும் (வசனம் 14) அப்படியும் நமது ஆசாரியராக இருக்கவும் முடிந்தது.

**அவர்களின் தொடரும் இயல்பில்**

*முந்திய விவாதத்தைச் செய்கையில், மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் ஒழிந்துபோனது பற்றிய பதிவு எதுவும் இல்லை என்பதால், ஒருவகையில் பேசினால், அது* தொடர்ந்து இருக்கும் *ஒரு ஆசாரியத்துவம் என்ற வகையில் நினைக்கப்பட முடியும் (வசனங்கள் 3, 24) - இது இயேசுவின் விஷயத்தில் நேரடியாகவே உண்மையாக உள்ளது. இயேசு ''என்றென்றைக்கும்'' ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார் (வசனங்கள் 16, 17, 25, 28). இது மாற்றப்பட்டுக் கொண்டிருந்த லேவியத்துவ ஆசாரியத்துவத்திற்கு (வசனங்கள் 11, 12) நேர்மாறானதாக இருந்தது.*

**அவர்களின் மேன்மையான இயல்பில்**

*இது கலந்துரையாடலின் முதன்மைக் கருத்தாக உள்ளது. யூதக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாத யூதர்களைக் காட்டிலும் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற உணர்வுகொள்ளத் தேவையில்லாது இருந்தது. கிறிஸ்தவர்கள் பிரதான ஆசாரியரைக் கொண்டிருக்கின்றனர் என்பது மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் ஆசாரியத்துவ ஏற்பாடு யூதத்துவ ஆசாரியத்துவ ஏற்பாட்டைக் காட்டிலும் மேன்மையானதான உள்ளது.[4] லேவியத்துவ ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் மேன்மையானதாக உள்ளது என்று நாம் அறிவது ஏன் என்பதற்கு எழுத்தாளரால் ஏற்படுத்தப்பட்ட கூடுதல் விவாதங்கள் பின்வருமாறு:*

- *பிதாவாகிய ஆபிரகாமே, போரில் கைப்பற்றியவற்றில் தசமபாகத்தை மெல்கிசேதேக்குக்கு கொடுத்தார் (வசனம் 4).*
- *மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தார் (இது மேலான ஒருவரின் செயலாகும்) (வசனங்கள் 6, 7).*
- *ஒரு கருத்தில் லேவி (தமது எள்ளுத் தாத்தாவின் மூலமாக), மெல்கிசேதேக்குக்குத் தசம பாகம் கொடுத்தார்.*
- *லேவியத்துவ ஆசாரியத்துவம் பூரணத்தன்மையைக் கொண்டுவரவில்லை என்றாலும் (வசனங்கள் 11, 19), மெல்கிசேதேக்கின் முறைப்படியான கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் அதைக் கொண்டுவருகிறது (வசனங்கள் 19, 25).*
- *லேவியர்கள் ஆணையில்லாமல் ஆசாரியர்கள் ஆக்கப்பட்டனர், ஆனால் மெல்கிசேதேக்கு வாக்குத்தத்தம் தொடர்பாக, ஒரு ஆணைபற்றி சங்கீதம் 110:4 பேசுகிறது (எபிரெயர் 7:20, 21).*
- *லேவியத்துவ ஆசாரியர்கள் தொடர்ந்து பலிகள் செலுத்த வேண்டியிருந்த வேளையில், இயேசு ஒரேதரம் பலி செலுத்த வேண்டியவராயிருந்தார் (வசனம் 27).*

**அவர்களின் ஒரே ஒருவர் இயல்பில்**

*ஏவுதல் பெற்ற பதிவேட்டில் உள்ளபடி, பழைய ஏற்பாட்டில் மெல்கிசேதேக்கின் முறைமைப்படியாக ஆசாரியரானவர் ஒரே* ஒருவர் *தாம் இருந்தார், இது லேவியத்துவ முறைமையில் இருந்த ஆசாரியர்களின் திரள்கூட்டத்திற்கு நேரெதிரானதாக இருந்தது (வசனம் 23). இயேசு "ஒரேதரம்"*

பலி செலுத்திவிட்டதாலும் (காண்க 10:10) நமக்காகப் பரிந்து பேசுபவர் என்ற வகையில் (காண்க 2:17, 18; 4:14-16) தொடர்ந்து உயிருடன் இருப்பதாலும் (7:24, 25, 27), இன்றைய நாட்களில் ஒரே ஒரு பிரதான ஆசாரியரே தேவைப்படுகிறார்.

## ஒரு கருத்து

வேதவசனத்தில் இருந்து ஒரு வசனப்பகுதியை நாம் வாசிக்கும்போது, எழுத்தாளரின் நோக்கத்தைத் தீர்மானித்தல் என்பது சில வேளைகளில் சிரமமாக உள்ளது. அப்படிப்பட்ட பிரச்சனை எதுவும், எபிரெயர் 7ம் அதிகாரத்தைப் பொறுத்தமட்டில் எழுவதில்லை, ஏனென்றால் இந்த அதிகாரத்தில் எழுத்தாளர் தமது நோக்கத்தைக் குறிப்பிட்டார். அடுத்த அதிகாரம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது:

> மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டமெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு (எபிரெயர் 8:1, 2).

"மெல்கிசேதேக்கின் முறைமைப்படியான," மேன்மையான ஆசாரியத்துவம் கொண்டுள்ள, ஆச்சரியம் நிறைந்த இந்தப் பிரதான ஆசாரியர், *நமது* பிரதான ஆசாரியராக இருக்கிறார். அவர் பரலோகத்தின் "பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்கிற" *நமது* ஊழியராக இருக்கிறார். அவர் முழுநிறைவான மதிப்புள்ள பலியை - எல்லாக் காலத்திற்குமான பலியை - நமக்காகச் செலுத்தியபோது (7:27; 9:14, 24-28) *நமக்கு* ஊழியம் செய்தார். அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்ற வகையில் (4:14-16) தொடர்ந்து நமக்கு ஊழியம் செய்கிறார். "ஆசாரியர்" என்பதற்கான (*pontifex* என்ற) இலத்தீன் வார்த்தை, "பாலம் கட்டுபவர்" என்று அர்த்தப்படுகிறது.[5] இயேசு, தமது மரணம் மற்றும் நமக்காகத் தொடர்ந்து பரிந்து பேசுதல் ஆகியவற்றின் மூலமாக, நமக்கும் தேவனுக்கும் இடையில் "பாலம் ஒன்றைக் கட்டுகிறார்." ஒரு எழுத்தாளர் கூறியது போல, அவர் நமது "பிரதம மந்திரியாக" இருக்கிறார்.[6]

## போதகருக்குக் குறிப்புகள்

"விந்தையான மெல்கிசேதேக்கு" என்பது இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்பாக இருக்கலாம். "பலமான ஆகாரத்திற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா?" என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது.

1983ல், டெக்சாஸின் டென்ட்டெனில், "மெல்கிசேதேக்கின் முறைமைப்படி" என்று அழைக்கப்பட்ட உன்னதமான பாடம் ஒன்றை, வின்ஃப்ரெட் கிளார்க் அவர்கள் முன்வைத்தார்.[7] மேலும், G. C. ப்ரூவெர் அவர்கள், பிரசங்கங்கள் என்ற தமது புத்தகத்தில், "கிறிஸ்து கிறிஸ்தவர்களின் பிரதான ஆசாரியர்" என்பதன் மீதான ஒரு பாடத்தை உள்ளடக்கினார்.[8]

குறிப்புகள்

[1]இந்தப் பகுதியில் உள்ள மூன்று துணைத் தலைப்புகளும் Winifred Clark, "After the Order of Melchizedek," *Second Annual Denton Lectures* (1983): 123-30 என்ற புத்தகத்தில் இருந்து வந்துள்ளன. [2]இது, தாவீதுக்கும் அவரது வழித்தோன்றல்களும் நடைமுறைப்படும் இராஜரீக சங்கீதமாக உள்ளது. தாவீதின் குமாரனாகிய இயேசுவில் இது தனது முழுமையான மற்றும் நிறைவான நடைமுறையைக் கொண்டுள்ளது. [3]இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் உள்ள வரைவட்டவணையைக் காணவும். [4]இந்தப் கூற்றின் மறைகருத்துக்களில், சில "கிறிஸ்தவம் மேன்மையானது!" என்று அழைக்கப்படும் நமது அடுத்த பாடத்தில் குறிப்பிடப்படும். [5]William Barclay, *The Letter to the Hebrews,* 3d ed., rev. and updated, The New Daily Study Bible (Louisville: Westminster John Knox Press, 2002), 37. [6]Robert Milligan, *Epistle to the Hebrews* (Nashville: Gospel Advocate Co., 1954), 218. [7]Clark. [8]G. C. Brewer, *Brewer's Sermons: Christ Crucified* (Nashville: B. C. Goodpasture, 1952), 119-36.

| **மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம்: நிழல்** | **இயேசுவின் ஆசாரியத்துவம்: உண்மை நிலை** |
|---|---|
| ஒரு இராஜாவும் ஆசாரியரும் *(7:1)* | ஆசாரியரும் இராஜாவும் (காண்க *1* தீமோத்தேயு *6:15)* |
| நீதி மற்றும் சமாதானம் ஆகியவற்றினால் பண்புப் படுத்தப்பட்டது *(7:2)* | வாழ்வின் *மிக உயர்வான* பண்பு *(7:16, 27)* |
| லேவி கோத்திரத்தில் இருந்து வரவில்லை *(7:3அ)* | லேவி கோத்திரத்தில் இருந்து வரவில்லை *(7:14)* |
| அவரது ஆசாரியத்துவத்தின் முடிவு பற்றிய *பதிவேடு* எதுவும் இல்லை *(7:3ஆ)* | "என்றென்றைக்குமான" ஒரு ஆசாரியத்துவம் *(7:16, 17, 25, 28)* |
| லேவியத்துவ ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேன்மையானது *(7:7)* | மேன்மையான ஒரு ஆசாரியத்துவம் (காண்க *9:11)* |
| வசனத்தில் *ஒரே* ஒரு ஆசாரியரே கிறிஸ்துவுடன் ஒப்பிடப்பட்டார் *(7:1-8:2)* | இன்றைய நாட்களில் ஒரே ஒரு பிரதான ஆசாரியரே தேவைப்படுகிறார் (காண்க *10:10)* |